நகரங்களில் மக்கள் அடர்த்தியான பகுதிகளை தொடர் கட்டிடப் பகுதியாக மாற்ற அரசாணை: முதலமைச்சருக்கு 'ரியல் எஸ்டேட்' சம்மேளனம் நன்றி

சென்னை, ஜூலை 6–

முதல்வர் ஸ்டாலின், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமிக்கு, அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தேசியத் தலைவர் ஆ.ஹென்றி பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து கடிதம் எழுதி உள்ளார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:–

''நாகர்கோவில் மாநகராட்சியில் அகலம் குறைந்த தெருக்களில் அமைந்துள்ள பூர்வீக மனைகளில் முறையாக அனுமதி பெற்று வீடு கட்ட இயலவில்லை. இதனால் வங்கிகளில் கடன் பெற்று புதிதாக வீடு கட்ட விரும்பும் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். காரணம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019இல் இதற்கு வழிவகை செய்யவில்லை. இது சம்பந்தமாக கடந்த அண்ணாதிமுக ஆட்சி காலத்தில் நாகர்கோவில் நகர மன்றத்தில் 2019ம் ஆண்டில் மார்ச் 8ந் தேதி அன்று நாகர்கோவில் நகரத்தில் பொதுமக்கள் அதிகம் வசிக்கும் அடர்த்தியான பகுதியை கண்டறிந்து தொடர் கட்டுமான பகுதியாக மாற்றம் செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியது. அதனை நகர் ஊரமைப்பு இயக்குனருக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் இதுவரை எந்த விதமான தீர்வும் ஏற்படவில்லை.

ஆகவே தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மேற்கண்ட நாகர்கோவில் பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 16ந் தேதி அன்று எமது 'பெயிரா' கூட்டமைப்பிற்கு கோரிக்கை வைத்து கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் பகுதியை சார்ந்த எம்.எஸ்.குமார் கடிதம் எழுதி இருந்தார்.

இது சம்பந்தமாக அவர் எழுதிய கடிதத்தை தங்களின் மேலான கவனத்திற்கு பரிந்துரைத்து மேலான நடவடிக்கைக்கு வலியுறுத்தி கடிதம் எழுதி இருந்தேன்.

எமது கூட்டமைப்பின் பரிந்துரை கடிதத்தை கவனத்தில் கொண்டு, எம்.எஸ்.குமார் எழுதிய கடிதத்தை பரிசீலித்து, நாகர்கோவிலில் அனுமதி பெற்று வீடு கட்ட விரும்பும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, கடந்த மாதம் 18ந் தேதி அன்று நாகர்கோவில் மாநகராட்சியில் பொதுமக்கள் பெருமளவில் வசிக்கும் மிக அடர்த்தியான பகுதியை கண்டறிந்து அதனை அரசாணை மூலம் நாகர்கோவில் பகுதியில் வசிக்கும் பொது மக்களின் நீண்ட நாள் கனவை நினைவாக்கியிருக்கிறீர்கள். இதற்காக முதலமைச்சருக்கும், தங்களுக்கும், வீட்டு வளர்ச்சித்துறை செயலாளர், டிடிசிபி இயக்குனருக்கும், எமது அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் சார்பில் உளமார்ந்த பாராட்டுகளையும், இதயப்பூர்வமான வாழ்த்துகளையும், நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதுபோன்று தமிழகம் முழுவதும் இருக்கும் நகரங்களில் பொதுமக்கள் அதிகம் வசிக்கும் மிக அடர்த்தியான பகுதிகளையும் கண்டறிந்து விரைவில் அதனையும் தொடர் கட்டிட பகுதியாக(CBA)மாற்றம் செய்து அரசாணை வெளியிட்டு, உரிய தீர்வு காண வேண்டும்''.

இவ்வாறு அக்கடிதத்தில் அவர் எழுதி உள்ளார்.

பொது அறிவிப்பு

திரு. ரமேஷ் சுப்ரமணியம் , பட்டயக் கணக்காளர், த/பெ. திரு. சுப்ரமணியம், எண்.15, பத்மநாபா தெரு . டீ. நகர் , சென்னை 600017 என்ற முகவரியில் பணி செய்யும் எனது கட்சிக்காரர் தெரிவிப்பது என்னவென்றால், எண்.160, ஹஸ்தினாபுரம் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் தாலுகா (முன்பு சைதாப்பேட்டை தாலுகா) புலன் எண்.22/2பி கதவு எண்.23/29, ராஜராஜேஸ்வரி நகர், சிட்லபாக்கம் சென்னை – 600064 என்ற முகவரியில் உள்ள சொத்தின் சம்மந்தமாக சார்பதிவாளர் பல்லாவரம் அலுவலகத்தில் 22.01.1971 அன்று, பதிவு செய்யப்பட்ட அசல் கிரய பத்திரம் ஆவண எண்.77/1971, 13.05.2024 அன்று மாலை 3:30 P.M. மணிக்கு எனது கட்சிக்காரர் அவரது வாகன எண் TN 01 BF 0292 ஆக பதிவு செய்யப்பட்ட வாகனத்தில் ஒரு பையில் வைத்து ஆர்யா கவுடா சாலை, மேற்கு மாம்பலத்தில் நிறுத்தியபொழுது, மேல்கூறிய அசல் ஆவணம் தொலைந்து விட்டது.

மேலும் எனது கட்சிக்காரர் திரு. ரமேஷ் சுப்ரமணியம், தனது விடாமுயற்சியுடன் தேடியும் தற்பொழுது வரை மேற்குறிப்பிட்ட அசல் பத்திரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளார். மேற்படி பத்திரம் எவர் வசம் இருந்தாலும், இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபனை மற்றும் விபரங்கள் ஆகியவற்றை எழுத்து மூலம் கீழ்க்கண்ட வழக்கறிஞர் அவர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு குறிப்பிட்ட 15 நாட்களுக்குள் தகவல் மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் வரவில்லையென்றால் யாருக்கும் மற்றும் எவருக்கும் இந்த சொத்தின் மீது உரிமை மற்றும் எந்த வில்லங்கமும் இல்லை என்றும் மற்றும் மேலே குறிப்பிட்ட சொத்தினை விருப்பப்படி பரிமாற்றம் செய்வார்கள் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இடம் : சென்னை
தேதி : 06.07.2024

பிரவீன் சு. குமார்,
வழக்கறிஞர்,
எண்.10, தரை தளம், கே. வி. காலனி 1வது தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை 600033
கைபேசி: 9940059680

PUBLIC NOTICE

My client Mr. Dhanakarna and Mr. Thiruvikraman both sons of Mr.C.A. Purushothamman, residing at Door No.4, Vijayalashmi Nagar, Annakaputhur, Chennai- 600070. The property was settled to Mr. Thiruvikraman, by his mother Mrs.Dhanalakshmiammal w/o Mr.C.A. Purushothamman in and by a Settlement Deed dated 16.10.2013, registered as Document No.6939 of 2013, in the Office of the Sub Registrar at Pammal. My client namely Mr. Thiruvikraman lost the Documents ie, Original Settlement Deed dated 16.10.2013, registered as Document No.6939 of 2013, and Original Settlement Deed 26.03.2004, registered as Document No.1276 of 2004, during Flood in Chennai in the year 2015.

My client received Certified Copies of the above said document from Sub Registrar Office as per guidelines issued by the Tamilnadu Government. My client Mr. Dhanakarna as the present owner of settled portion of the property viz. 25 cents of the property and Mr. Thiruvikraman retaining the balance portion of the property for himself. Both are in separate possession and enjoyment of the Schedule mentioned property, from the date of acquiring it and the property is free from encumbrances. Mr. Dhanakarna has approached the State bank of India, SME Guindy, for and got sanction of SME LOAN against his share in the Schedule mentioned property given below as collateral. Any person having ownership or claim over schedule of property / or anyone having objection for mortgage, please approach the counsel within 15 days from the date of this notice.

SCHEDULE

All the piece and parcel of the land measuring acre 0.61 Cents (viz 36 cents with Mr. Thiruvikraman and 25 cents with Mr. Dhanakarna), Comprised in Old S.No.274, Old Patta No.1748, as per Patta S.No.8537, New S.No.274/2B, situate at Anakaputhur Village, Pallavaram taluk and Chengalpet District (formerly Alandur Taluk and Kancheepuram District), bounded on the, NORTH BY S.No.271, SOUTH BY S.No.282, EAST BY S.No.275, WEST BY Govt. acquired land (S.No.24/2A), situate within the Sub Registration District of Pammal and the Registration district of Tambaram (Formerly South Chennai).

Dr. S VIDYA
Advocate- Mobile No:9841092325
Kaveri Complex, No.568, 5th Floor, Door No.50,
Nungambakkam High Road,Chennai – 600034.

கார்த்திக் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் டிரஸ்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 'பாரி ஹவுஸ்', 2 வது தளம், எண்.43, மூர் தெரு, பாரிமுனை, சென்னை 600 001
Phone: 044 2530 7123; Fax: 044 2534 6466
CIN: L65993TN1978PLC012913
Email ID: kartikinvestmentstrust@gmail.com; Website: www.kartikinvestments.com

உறுப்பினர்களுக்கு அறிவிப்பு

கார்த்திக் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் டிரஸ்ட் லிமிடெட்டின் 46வது வருடாந்திர பொது உறுப்பினர்கள் கூட்டம் (AGM) உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள அலுவல்களை நிறைவேற்றுவதற்காக வெள்ளிக்கிழமை, 2 ஆகஸ்ட், 2024 அன்று மாலை 4.00 மணிக்கு 'தாமரை டெக் பார்க்,' வடக்கு தொகுதி 3வது தளம், SP பிளாட் எண்.16-19 & 20-A திரு-வி-கா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், உள்வட்ட சாலை, கிண்டி, சென்னை - 600032ல் நடைபெறும் என்று 6 மே 2024 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013 இன் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படியும் மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (ப்டியிலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 2015 என்று இதன் மூலமும் அறிவிக்கப்படுகிறது.

2024-க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் அறிவிப்பு ஆகியவை, நிறுவனம் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகவும், இதர உறுப்பினர்களுக்கு காகித பிரதியாகவும் 5 ஜூலை, 2024 அன்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம்: www.kartikinvestments.com, RTA: https://evoting.kfin.com/public/Downloads.aspx மற்றும் பங்கு வர்த்தக இணையதளம் www.bseindia.com ஆகிய இணையதளங்களிலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

கம்பெனியின் உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் பங்குமாற்றுப் புத்தகங்கள் சனிக்கிழமை, 27 ஜூலை, 2024 முதல் வெள்ளிக்கிழமை, 2, ஆகஸ்ட், 2024 வரை, (இருநாட்களும் உட்பட) மூடி வைக்கப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அறிவிப்பில் காணும் அனைத்து அலுவல்களையும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் தங்களது வாக்குகளைப் பதிவு செய்வதற்கான ரிமோட் மின் வாக்களிப்பு வசதியை கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் வழங்குகிறது. ரிமோட் மின் வாக்களித்தல் செவ்வாய்க்கிழமை 30 ஜூலை, 2024 அன்று காலை 9.00 மணிக்கு (IST) தொடங்கி வியாழக்கிழமை, 1 ஆகஸ்ட், 2024 அன்று மாலை 5.00 மணிக்கு (IST) முடிவடைகிறது.

இந்த நேரத்திற்குப் பிறகு கேஃபினால் வழங்கப்படும் ரிமோட் மின் வாக்களிக்கும் வசதி செயலிழக்கப்படும். மின்னணு முறையில் மின் வாக்குப்பதிவு செய்ய அல்லது AGMல் வாக்குப்பதிவு செய்ய தகுதியுடைய உறுப்பினர்களைத் தீர்மானிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதி 26 ஜூலை, 2024 கட் ஆஃப் தேதி ஆகும். உறுப்பினர்களுக்கு மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, கம்பெனியின் பங்குகளை வாங்குவதன் மூலம் உறுப்பினராகி மேற்படி கட்ஆஃப் தேதி 26 ஜூலை, 2024 தங்கள் வசம் பங்குகள் வைத்துள்ள எந்தவொரு உறுப்பினருக்கும் வாக்களிப்பதற்காக நுழைவு முகவரி மற்றும் பாஸ்வர்ட் விவரங்களுடன் கேஃபினால் மின்னஞ்சல் அனுப்பப்படும்.

அத்தகைய உறுப்பினர் மின் வாக்குப் பதிவுக்காக கேஃபினிடம் ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், தங்களிடம் உள்ள நுழைவு முகவரி மற்றும் பாஸ்வர்டை அவர் பயன்படுத்தி மின் வாக்குப் பதிவு செய்யலாம். ரிமோட் மின் வாக்களித்தல் மூலம் தங்களது வாக்குகளை பதிவு செய்யாதவர்களுக்கு AGMல் வாக்களிக்கும் வசதி அளிக்கப்படும். அதே நேரம் ரிமோட் மின் வாக்களித்தல் மூலம் தங்கள் வாக்குகளை பதிவு செய்துவிட்ட பிறகு எந்தவொரு பங்குதாரரும் AGMல் பங்கேற்கலாம். ஆனால் அவர்கள் மறுபடியும் AGMல் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தேதியான 26 ஜூலை, 2024 அன்றுள்ளபடி உறுப்பினர்கள் பதிவேட்டில் காணும் நபர்கள் அல்லது டெபாசிட்டரீஸ் நிர்வகிக்கும் பயனாளி உரிமையாளர் பதிவேட்டில் காணும் நபர்களும் AGMல் வாக்களிக்கும் வசதியை பயன்படுத்த தகுதி உடையவர்களாவர்.

AGMல் மின்னணு வாக்களித்தல் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் பொதுக்கூட்ட அறிவிப்பினை பார்க்கவும் மற்றும் மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான குறைகள் எதுவுமிருப்பின் உறுப்பினர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய நபர் திரு. ராஜ் குமார் காலே, உதவித் துணைத் தலைவர், கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட், செலினியம் டவர் B, மனை 31-32, கச்சிபௌளி, நிதி மாவட்டம், நானக்ராம்குடா, ஹைதராபாத் - 500 032, தெலுங்கானா தொ.பேசி: 040-67162222 அல்லது மின்னஞ்சல் evoting@kfintech.com

பங்குகளை டிமேட் முறையில் வைத்திருக்கும் பட்சத்தில், டெபாசிட்டரி பங்கேற்பாளர் தங்களுடைய முழுமையான வங்கி கணக்கு விவரங்கள், பான் விவரம், வாரிசு நியமனம், கையொப்பங்கள் மற்றும் தொடர்பு கொள்வதற்கான விவரங்கள் ஆகியவற்றை புதுப்பிக்க வேண்டும். அல்லது பங்குகளை பிசிக்கல் வடிவில் RTA உடன் வைத்திருந்தால் அவர்கள் படிவம் ISR-1, ISR-2 மற்றும் SH-13. என்பதில் விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இயக்குனர் குழுவின் ஆணைப்படி
சென்னை
ஜூலை, 5, 2024

கிருத்திகா விஜய் கார்த்திக்
நிறுவன செயலாளர்

ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட்

swelect
Stay powerful when sunshine. And thereafter...

CIN: L93090TN1994PLC028578
பதிவு அலுவலகம் : 'ஸ்வெலக்ட் இல்லம்', எண்.5, சர் P.S. சிவசாமி சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : +91 44 24993266/24679600, தொலைநகல் : +91 44 24995179
மின்னஞ்சல் : cg.ird@swelectes.com இணையதளம் : www.swelectes.com

29வது ஆண்டு பொதுக்கூட்டம், மின்னணு வாக்களிப்பு, புத்தக மூடல் மற்றும் பதிவுத்தேதி அறிவிப்பு

கம்பெனி உறுப்பினர்களின் இருபத்து ஒன்பதாவது ஆண்டு **பொதுக்கூட்டம் (AGM), ஜூலை 29, 2024** அன்று **மாலை 3.30 மணிக்கு,** சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட்(CDSL)-ஆல் வழங்கப்படவுள்ள காணொளி காட்சி ("VC") வசதி மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலம், கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் (MCA) வழங்கிய சுற்றறிக்கை எண்.9/2023 தேதி செப்டம்பர் 25, 2023 மற்றும் செக்யூரிட்டீஸ் மற்றும் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியாவால் (SEBI) வழங்கப்பட்ட சுற்றறிக்கை எண்.SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 தேதி அக்டோபர் 7, 2023-க்கு இணங்க, மே 24, 2024 தேதியிட்ட ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வணிக பரிவர்த்தனைகள் நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க, கம்பெனியின் 29வது ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு அத்துடன் 2023-24-க்கான ஆண்டு அறிக்கை, கம்பெனி/பதிவாளர் மற்றும் மாற்று முகவர் (பதிவாளர்) / டெபாசிட்டரி ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டும் ஜூலை 05, 2024 அன்று மின்னணு முறை மூலம் அனுப்பப்பட்டுள்ளது. காகித வடிவிலான 2023-24-க்கான வருடாந்திர அறிக்கையுடன் மேற்கூறிய அறிவிப்பை பெற விரும்பும் உறுப்பினர்கள் **cg.ird@swelectes.com**-க்கு, ஃபோலியோ எண்./DP ID மற்றும் கிளையன்ட் ID குறிப்பிட்டு கோரியவர்களுக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.

மேற்கூறிய அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதற்கு பின்னர் நிறுவன பங்குகளை வாங்கி உறுப்பினரான நபர்கள், கெடு தேதியன்று அதாவது 22.07.2024 அன்று பங்குகளை வைத்திருப்பவர்கள், மேற்கூறிய அறிவிப்புடன் 2023-2024 ஆண்டு அறிக்கையை பெறுவதற்காக மின்னஞ்சல் மூலமாக நிறுவனத்திற்கோ அல்லது M/s.கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (RTA)-கோ தங்களுடைய டெபாசிட்டரியிடம் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரியிலிருந்து கோரிக்கை அனுப்பி பெற்று கொள்ளலாம். மேலும் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள விரிவான நடைமுறையை பின்பற்றி பயனர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல்லையும் (password) பெற்று கொள்ளலாம். பொதுக்கூட்ட அறிவிப்பு, மற்றும் 2023-24 ஆண்டு அறிக்கைகள் ஆகியவை கம்பெனியின் இணையதளம் (**www.swelectes.com**)-ல் கீழ்காணும் இணைய இணைப்புகளில் கிடைக்கபெறும்.

ஆண்டு அறிக்கை :
https://swelectes.com/wp-content/uploads/2024/07/Annual-Report-23-24.pdf
பொது கூட்ட அறிவிப்பு :
https://swelectes.com/wp-content/uploads/2024/07/AGM-Notice-23-24.pdf

மேலும் பங்கு சந்தைகளின் இணையதளங்களான (**www.bseindia.com** மற்றும் **www.nseindia.com**) மற்றும் CDSL இணையதளமான (**www.evotingindia.com**)-லும் கிடைக்கபெறும். உறுப்பினர் CDSL-ல் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்கு அளிக்க பதிவு செய்திருப்பின் அவர்கள் அதே பயனர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல்லை (password) பயன்படுத்தி தொலைதூர மின்னணு வாக்கு மூலம் வாக்களிக்கலாம்.

இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை **https://investors.cameoindia.com** இணையதள இணைப்பில் பதிவு செய்து, அறிவிப்புகள் மற்றும் வருடாந்திர அறிக்கையை பெற்று கொள்ளலாம். மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்களை எங்கு தங்களது டீமேட் (Demat) கணக்குகளை வைத்திருக்கிறார்களோ அந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் ('DPs') புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

29வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் ஈவுத்தொகை செலுத்துதல் (இறுதி மற்றும் சிறப்பு ஈவுத்தொகை, 29வது ஆண்டு பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டது) ஆகிய நோக்கத்திற்காக உறுப்பினர்கள் பதிவேடு **ஜூலை 23, 2024** முதல் **ஜூலை 29, 2024 (இரண்டு நாட்களும் சேர்த்து)** மூடப்பட்டிருக்கும். ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் ஈவுத்தொகைகான பதிவு தேதி **திங்கட்கிழமை ஜூலை 22, 2024** என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் இருபத்து ஒன்பதாவது பொதுக்கூட்டத்தை நடத்துவதற்காக மேற்கண்ட அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களுக்காக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு முறையில் உறுப்பினர்கள் வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்த கெடுத்தேதியான அதாவது 22.07.2024 அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் / பயனாளி உரிமையாளர்கள் பெயர் கொண்ட உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்களிக்கும் வசதிக்காக கம்பெனி M/s.சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்தை ஈடுபடுத்தியுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி பின்வரும் காலகட்டத்தில் கிடைக்கும் :

தொடங்கும் காலம் : ஜூலை 25, 2024 காலை 9.00 மணி முதல் (இந்திய நேரப்படி)
முடிவடைதல் : ஜூலை 28, 2024 மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி)

தொலைதூர மின்னணு வாக்கு பதிவு ஜூலை 28, 2024 மாலை 5.00 மணிக்கு பிறகு அனுமதிக்கப்படமாட்டாது மற்றும் தொலைதூர மின்னணு வாக்கு வசதி முடக்கப்படும்.

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி, மேலும் கூட்டம் நடைபெறும் போதும் மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கும் போதும் கிடைக்கப்பெறும். தொலைதூர மின்னணு வாக்கின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காதவர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு மூலம் வாக்களிக்கலாம்.

பங்குதாரர்களின் வாக்கு உரிமையானது, கெடு தேதியான, ஜூலை 22, 2024 தேதியன்று உள்ளபடி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் அவர்களது பங்குகளின் சரி விகிதத்திற்கு ஏற்ப இருக்கும். கெடு தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரி பராமரிக்கப்படும் பயன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் உள்ள நபர் மட்டுமே, தொலைதூர மின்னணு வாக்கு மற்றும் ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு மூலம் வாக்களிக்கலாம். ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு (AGM) முன்னர் தொலைத்தூர மின்னணு வாக்கு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க இயலாது. ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்த பின் அதை மாற்றவோ அல்லது மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆண்டு பொதுக்கூட்டம் நடக்கும் முன்பு / நடக்கும் போது தொலைத்தூர மின்னணு வாக்கு நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையான முறையிலும் நடைபெறுவதை ஆராய திரு.P. ஈஸ்வரமூர்த்தி, உரிமையாளர், M/s.P.ஈஸ்வரமூர்த்தி & கோ, கம்பெனி செயலாளர் அவர்களை ஆராய்வாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

நிதி சட்டத்தின்படி, ஈவுத்தொகை மதிப்பு ஒரு நிதியாண்டில் ரூ.5,000/-க்கு (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அதிகமாக உள்ள உறுப்பினர்களின் ஈவுத்தொகைக்கு வரி பிடித்தம் உண்டு மற்றும் வருமான வரி சட்டம், 1961 ('IT சட்டம்')-ன் படி உறுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் ஈவுத்தொகைக்கு கம்பெனியால் மூல வரி (TDS) கழிக்கப்பட வேண்டும். பொதுவாக, TDS தேவைக்கு இணங்க உறுப்பினர்கள் தங்கள் DP-க்களுடன் IT சட்டத்தின்படி குடியிருப்பு நிலை, பான் (PAN), வகை ஆகியவற்றை பூர்த்தி செய்து / அல்லது புதுப்பித்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் அல்லது காகித வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்கள் நிறுவனம் / பதிவாளரிடம் அது தொடர்புடைய ஆவணங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். காகித வடிவில் அல்லது மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், வரி விலக்கு பெற எங்கள் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரின் **https://investors.cameoindia.com**-ன் இணைய இணைப்பில் படிவம் 15G/15H ஸ்கேன் நகலை பதிவேற்றம் செய்யலாம்.

மின்னணு வாக்கு குறித்த ஏதேனும் சந்தேகங்கள் / குறைகள் இருப்பின் உறுப்பினர்கள் திரு.ராகேஷ் டால்வி, தலைமை மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL), 'A விங்', 25வது தளம், மரத்தான் பியூச்சரக்ஸ், மாஃபட்ச்லால் மில் காம்பௌன்ட்ஸ், N M ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400013 அணுகவும் அல்லது **helpdesk.evoting@cdslindia.com**-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 2255 33-ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரான M/s.கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், மாஃபட்லால் மில் காம்பௌன்ட்ஸ், N M ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400013 அணுகவும் அல்லது **helpdesk.evoting@cdslindia.com**-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 2255 33-ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரான M/s.கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியன் பில்டிங், எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600 002 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர் : திரு.P. முரளிதரன், மேலாளர், மின்னஞ்சல் முகவரி : **investor@cameoindia.com, murali@cameoindia.com,** தொலைபேசி : +91-44-28460390, தொலைநகல் : +91-44-28460129. உறுப்பினர்கள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (Frequently Asked Questions ("FAQs") மற்றும் மின்னணு வாக்கு குறிப்பேட்டை (e-voting manual) **https://www.evotingindia.com** இணையதளத்தில் "உதவி" பிரிவில் (help section) பார்க்கலாம்.

குழுமத்தின் ஆணைப்படி
ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக

ஓம்/-
ரா. சதீஸ்குமார்
நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 05.07.2024

பொது அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், சென்னை – 600 100, பள்ளிக்கரணை, 2வது தெரு, ஆறுமுகம் நகர், முன்சி காலனி எண்.19(1) என்ற முகவரியில் வசிக்கும் எனது கட்சிக்காரர் திரு. சுரேஷ் குமார் கந்தசாமி அவர்களுக்கு சொந்தமான ச.எண்.610 பகுதி, பட்டாப்படி புதிய ச.எண்.610/1A1A1, விஸ்தீரணம் 1600 சதுர அடி., "முன்சி காலனி" பள்ளிக்கரணை கிராமம், தாம்பரம் தாலுகா, இப்போது சோழிங்கநல்லூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் இப்போது சென்னை மாவட்டத்தில் உள்ள சொத்து மற்றும் சிறுதுண்டுகளும் அதன் பகுதிகளும் தொடர்பான அசல் விற்பனைப் பத்திரம் ஆவணம் எண்.1044/1992 தென் சென்னை இணை 1 சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை 05.04.2024 அன்று கீழ்க்கட்டளை பேருந்து நிலையம் அருகே அதன் ஜெராக்ஸ் நகலை எடுத்துக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது தொலைத்துவிட்டார். கடும் முயற்சி செய்து அதை தேடியும் அது கிடைக்கவில்லை. மேற்கூறிய ஆவணத்தின் மீது ஏதேனும் ஆர்வமோ அல்லது உரிமைகோரலைக் கொண்ட எவரும், இந்தத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு ஆவண ஆதாரத்துடன் தங்கள் ஆட்சேபனையைத் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், இல்லையெனில் மேலே கூறப்பட்ட அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டதாக கருதப்படும். ஆவணத்தை கண்டெடுப்பவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலோ அல்லது மேலே உள்ள முகவரியில் உள்ள எனது கட்சிக்காரரிடம் அதை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டி.மகேஷ், வழக்கறிஞர்
புதிய எண். 10/1, **பழைய எண்.**92/2, **முத்தையா தெரு,**
1வது தளம், வெள்ளாள தேனாம்பேட்டை,
சென்னை 600 086. **செல் :** 9884424372

பொது அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் தாலுக்கா, அனுமந்தபேட்டை, தூசி (சிடி) தூசி